## விடாமுயற்சியும் நம்பிக்கையும்

ஒரு படைத்தளபதி ஒரு போரில் படுதோல்வியடைந்து வெற்றியடையும் நம்பிக்கையிழந்தவராக பாழடைந்த ஒதுக்குப்புறமான இடத்தில் ஒரு பாறையின் மீது உட்கார்ந்து நிகழ்ந்தவற்றைப்பற்றி யோசித்துக்கொண் டிருந்தார். அங்கே ஒரு எறும்பின் மீது பார்வை சென்றது. அந்த எறும்பு தன் வாயில் ஒரு பருக்கையைத் தாங்கியவாறு அப்பாறையின் மீது ஏற முயற்சித்துக்கொண்டிருந்தது. சற்று மேலே ஏறியபின் சறுக்கி மீண்டும் கீழே விழுந்துவிடுகிறது. ஆனால், விடாது திரும்பத் திரும்ப முயற்சியைத் தொடர்ந்தது, இதன் பலனாக அது மேலே ஏறுவதில் வெற்றிபெற்றது. இந்தக் காட்சியைக் கண்ட அந்த படைத்தலைவரின் மனதில் நம்பிக்கை கூடர்விட்டெரியத்துவங்கியது. இந்த சிறிய எறும்பு பல முறை தோற்ற நிலையிலும் நம்பிக்கையிழக்காமல் தன் முயற்சியைத்தொடர்ந்து வெற்றி யடைந்தது, நானோ சிறந்த படைப்பான மனிதன், நான் ஏன் நம்பிக்கை யிழக்கவேண்டும்? அதன்பின் விடாமுயற்சியினை மேற்கொண்டு தன்னு டைய படைகளைச் சேகரித்து பகைவர்களுடன் போரிட்டு வெற்றி கண் டான். கவனித்துப்பார்ப்போமேயானால் இந்தப் போரில் மிகப்பெரிய மற்றும் முடிவுகட்டும் ஆயுதமாக இருந்தது அவனிடம் ஏற்பட்ட உறுதி யான நம்பிக்கையும் விடாமுயற்சியுமே என்பது விளங்கும். இந்த உறுதி யான நம்பிக்கை அந்தச் சிறு எறும்பு தன் செயலால் இந்தப் படைத்தலை வருடைய மனதில் எழுச்சியை உண்டாக்கியுள்ளது.

இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர்களிடம் தொண்ணூற்றொன்பது பேரைக் கொலை செய்த ஒருவனைப்பற்றிக் கூறினார். அவன் தன்னுடைய தீயச்செயலை உணர்ந்தவனாக அதற்காக பாவமன்னிப்புக்கோர வேண்டும் என்று நினைத்தான். இத்தனை பேரைக் கொலை செய்த எனக்குப் பாவ மன்னிப்புக் கிடைக்குமா என்று அவன் யோசிகலானான். ஒரு பெரியாரி டம் வந்து தான் பாவமன்னிப்புக்கோர விரும்புவதாகவும் மன்னிப்புக் கிடைக்குமா என்று அஞ்சுவதாகவும் முறையிட்டான். அதற்கு அவர் இல்லை உனக்கு அதற்கான வாய்ப்பே இல்லை என்று கூறினார். அதைக் கேட்டு ஆத்திரமடைந்த அவன் அந்தப்பெரியாரையும் கொன்றுவிட்டான். இப்போது நூறுபேரைக் கொன்றவனாக ஆகிவிட்டான். அவன் மிகவும் கவலைப்பட்டான், ஒரு அறிஞரிடம் வந்து தன் பிரச்சினையைக் கூறினான். அதனைக்கேட்ட அவர், ஆம் உனக்கு பாவமன்னிப்பு ஏற்றுக்கொள்ளப் படும், ஆனால் ஒரு நிபந்தனை, நீ உன்னுடைய இருப்பிடத்தை மாற்ற வேண்டும், உன்னுடைய ஊரைவிட்டு இன்ன ஊருக்குச் சென்றுவிடு, அங்கு நல்லவர்கள் வசிக்கிறார்கள், நீயும் அவர்களுடன் சேர்ந்து இறை வனை வணங்கலாம். இதனைக்கேட்ட கொலையாளி மிகவும் சந்தோஷ மடைந்தான். பாவமன்னிப்பு ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை

www.uzairfalahi.com

அவனுடைய நரம்புகளில் உற்சாக உணர்வை ஏற்படுத்திவிட்டது. நம்பிக்கையற்ற அந்த இருண்ட பாதைகளிலிருந்து விலகி அந்த ஊருக்குப் புறப்படடுச் சென்றுகொண்டிருந்தான், ஆனால் வழியிலேயே அவனுடைய ஆயுள் முடிந்துவிட்டது, அவன் இறந்து உயிரும் பிரிந்துவிட்டது. ரஹ்மத் மற்றும் அத்ஜாபு (வேதனை) கொடுக்கும் மலக்குகள் வந்துவிட்டனர், அவனை யார் வசம் ஒப்படைப்பது என்ற கேள்வி எழுந்தது. ரஹ்மத்துடைய மலக்குகள் அவன் தூய மனதுடன் மன்னிப்புக் கோரியுள்ளான் ஆகவே நாமே அவனைக் கொண்டுசெல்வோம், அதாபுடைய மலக்குகள் கூறினர் இவன் நூறுபேரைக் கொன்ற கொலையாளி, ஆகவே அவனை எங்களிடமே ஒப்படைக்கவேண்டும். இறுதியில், அவன் புறப்பட்ட இடத்திலிருந்து சென்று சேர இருந்த அந்த ஊருக்கிடையிலான தூரத்தை அளந்து பார்க்கவேண்டும் என்று முடிவு செய்தனர். இறந்துவிட்ட அவன் சான்றோர்களுடைய அந்த ஊருக்கு அருகில் சென்றுவிட்டிருந்தானேயானால் அவனை ரஹ்மத்துடைய மலக்குகளிடம் ஒப்படைக்கவேண்டும் மற்றும் அவன் தீயவர்கள் வாழ்ந்துவந்த அந்த ஊருக்கு அருகிலேயே இருப்பானேயானால் அவனை வேதனை செய்யும் மலக்குகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுதான் அந்த முடிவு. அவன் கடந்துவந்த பாதையை அளந்து பார்த்தபோது அவன் சான்றோர்களுடைய அந்த ஊருக்கு அருகில் பெறப்பட்டான், அவன் ரஹ்மத்துடைய மலக்குகளிடம் ஒப்படைக்கப்பட்டான் (இந்த சம்பவம் முழுவதும் (مُتفق عليه) ஆன ஹதீத்ஸிலிருந்து இங்கே பதிவு செய்யப்படுகின்றது.

நம்பிக்கை என்பது இன்னல்களும் கஷ்டங்களும் நிறைந்த நிலையில் பயந்து பீதியடைவதற்குப் பதிலாக பிரச்சினைகளுக்கான தீர்வு வரும் என்று மன நிம்மதிகொள்ளவேண்டும் என்பதாகும், பற்றாக்குறைக்குப்பின் வளமும் கடுமையான இன்னல்களுக்குப்பின் மென்மையும், கஷ்டங்களுக்குப்பின் எளிமையும் நிச்சயம் வரும் என்பதை மனதார உணர்ந்து காத்திருக்கவேண்டும். மனித இயல்புகளின் பகுதியாகவே நம்பிக்கை கருதப்படுகின்றது, இதுவே மனிதனை இழந்தவற்றிற்கு ஈடுசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் ஊக்குவிக்கின்றது மற்றும் இறுதிவரை தன்னுடைய குறிக்கோளைஅடைவதில்அவனை ஈடுபடுத்திக்கொண்டிருக்கின்றது.

நபிமார்களில் மனஉறுதிமிக்கவர்களுடைய வாழ்கையினை நாம் இந்த கோணத்தில் ஆய்வு செய்வோமேயானால் சிறந்த முன்மாதிரிகள் நமக்குத் தென்படும். அல்லாஹ்வின்புறம் அழைக்கும் பணி மிகவும் கஷ்டமான ஒன்றாகும். ஒரு சமுதாயத்தில் நிலைபெற்றிருக்கும் (தவறான) வாழ்க்கை முறையினை அடியோடு அகற்றி (சீரான உண்மையான) மற்றொரு அமைப்பினை மாற்றியமைப்பது, மக்களின் மனப்பாங்குகள், விசுவாச உணர்வுகளை முழுமையாக மாற்றுவது, பாரம்பரியங்கள், மக்களுடைய



www.uzaifalahi.com

விருப்பங்கள், வெறுப்பவைகள், அவர்களுடைய சிந்தனைகள் அனைத்தையும் மாற்றிவிட முயற்சிப்பது என்பது எளிதான ஒன்றல்ல. இதனை மேற்கொள்வதில் காலடி வைக்கும் அந்த முதற்கட்ட முயற்சியிலேயே முழு சமாதாயத்தின் எதிர்ப்பு தடையாக இருக்கும். ஆனால், நபிமார்கள் இந்த மேலான பணியினை உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில்தான் மேற்கொள்கின்றனர், இன்று இல்லையென்றாலும் நாளை மாற்றி விடமுடியும், ஆயிரம் தோல்விகளுக்குப் பின்பும் நம்பிக்கையிழப்பதில்லை. ஒவ்வொரு கோணத்திலும் எதிர்ப்பு மற்றும் நிராகரிப்பு காணப்பட்டாலும் அவர்களுடைய நம்பிக்கையின் தீபம் அணையவிடுவதில்லை. இந்த வழியில் ஏற்படும் இன்னல்கள் கஷ்டங்கள் அவர்களை மனச்சோர்வடையச்செய்வதில்லை அவர்கள் எப்போதும் நம்பிக்கையைக் கைவிடுவதில்லை. இறைத்தூதர் ﷺ அவர்களின் வாழ்க்கை இதற்கான சிறந்த முன்மாதிரியாகும். ஆயிரக்கணக்கான எதிர்ப்புகள் மற்றும் இன்னல்களை எதிர்கொண்டபோதிலும், இன்று இல்லாவிட்டாலும் நாளை இவர்கள் ஈமான் கொள்வார்கள் என்ற உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் மக்களை அல்லாஹ்வின் மார்க்கத்தின்பால் அழைத்துக்கொண்டிருந்தார்கள், எந்த அளவிற்கு என்றால் மக்கள் அவர்களைக் கல்லெறிந்து ஓய்ந்துவிடும்வரைத் துன்புறுத்தியது அல்லாஹ்வால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலைக்கு எட்டியது. தாயிஃப் நகரத்தின் இந்த நிகழ்விற்குப் பிறகு திரும்பிவந்துகொண்டிருந்தபோது ஜிப்ரீல் (அ) அவர்கள் வந்து, அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான், தாங்கள் விரும்பினால் தாயிஃப் நகரத்தின் இரண்டு மலைகளுக்குமிடையில் அந்த மக்களை நசுக்கிவிடுகிறேன் என்று கூறியபோது இறைத்தூதர் ﷺ அவர்கள் நம்பிக்கை நிறைவான ஒரு பதிலை அளிக்கின்றார்கள், இல்லை, நான் இவ்வாறு விரும்பவில்லை, எனக்கு நம்பிக்கை உள்ளது, இவர்களுடைய அடுத்தத் தலைமுறைகள் ஈமான் கொள்வார்கள், இணைவைப்பினைக் கட்டாயம் கைவிடுவார்கள்.**(مُتفق عليه)** .

இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது அல்லாஹ்வின் உதவியால் அவர்கள் நேர்வழிபெறுவார்கள் என்று. இதே வகையான பண்பினை இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்ட சமயத்தில் த்ஸவ்ரு குகையில் ஹஜ்ரத் அபூபக்ர் (ர) அவர்களுடைய அச்ச உணர்வுகளைப் போக்கும் வகையில் கூறினார்கள்: **لاَ تَحْزَنْ إِنَّ اللهَ مَعَنَا**

*பொருள்: கவலை கொள்ளாதீர்கள், அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்.* இதே நிலையினை நாம் ஹஜ்ரத் நூஹ் (அ) அவர்களிடமும் காண்கிறோம், ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் தொடர்ந்து தம் வம்சத்தாரை அல்லாஹ்வின் புறமாக அழைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் களைத்துவிடவுமில்லை சோர்வடையவுமில்லை. முழுமனதுடனும் உறுதியுடனும் மக்கள் ஏற்றுக்

www.uzarfalahi.com

கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் தம் வம்சத்தாரை அல்லாஹ்வின் புறமாக அழைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தன் சமூகத்தினரை அனைத்து வகைகளிலும்அல்லாஹ்வின் புறம்அழைத்தார்கள். தனியாகவும், ஒட்டுமொத்தமாகவும், இரகசியமாகவும், வெளிப்படையாகவும் அழைத்தார்கள். அனைத்து முறைகளையும் ஒருநாள் அவர்கள் விசுவாசிகளாக மாறிவிடுவார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களை அழைப்பதற்காக மேற்கொண்டார். திருக்ஃகுர்ஆனில் அவர்கள் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிகளைப்பற்றி இவ்விதமாக வருணிக்கப்பட்டுள்ளது:

قَالَ رَبِّ إِنِّي دَعَوْتُ قَوْمِي لَيْلًا وَنَهَارًا ﴿٥﴾ فَلَمْ يَزِدْهُمْ دُعَاءِي إِلَّا فِرَارًا ﴿٦﴾ وَإِنِّي كُلَّمَا دَعَوْتُهُمْ لِتَغْفِرَ لَهُمْ جَعَلُوا أَصَابِعَهُمْ فِي آذَانِهِمْ وَاسْتَغْشَوْا ثِيَابَهُمْ وَأَصَرُّوا وَاسْتَكْبَرُوا اسْتِكْبَارًا ﴿٧﴾ ثُمَّ إِنِّي دَعَوْتُهُمْ جِهَارًا ﴿٨﴾ ثُمَّ إِنِّي أَعْلَنتُ لَهُمْ وَأَسْرَرْتُ لَهُمْ إِسْرَارًا ﴿٩﴾ **(سورة نوح :5 — 9)**

*பொருள்: அவர் பணிந்து கூறினார்: என் இரட்சகனே, நான் என் சமூகத்தினருக்கு இரவு பகலாக அழைப்பு விடுத்தேன், ஆனால் என்னுடைய அழைப்பு விரண்டோடுவதையே அர்களிடம் அதிகப்படுத்தியது. மேலும்நீ அவர்களை மன்னிக்கவேண்டும் என்பதறக்காக நான் அவர்களை அழைத்தபோதெல்லாம் அவர்கள் காதுகளில் விரல்களைத் திணித்துக்கொண்டார்கள், மேலும் தம் துணிகளால் முகத்தை மூடிக்கொண்டார்கள். மீண்டும் நான் அவர்களை உரக்கக்கூவி அழைத்தேன், பின்பு வெளிப்படையாகவும் அவர்களுக்கு எடுத்துரைத்தேன், அந்தரங்கமாகவும் விளக்கிக் கூறினேன்.* **(நூஹ்: 5-9)**

www.uzaifabali.com

இதுபோன்றே நாம் ஹஜ்ரத் யாஃகூப் (அ) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றிலும் பார்க்கிறோம், அளவுகடந்த கஷ்டமான காலங்களிலும் அவர்கள் நம்பிக்கையிழக்கவில்லை. அவர்களுடைய மிகப்பிரியமான இரண்டு மகன்களும் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டனர், ஹஜ்ரத் யூசுஃப் (அ) அவர்களைப் பற்றி எங்கு உள்ளார் என்ற எந்தத் தகவலும் கிடைக்காமலிருந்தது. தந்தையின் பாசத்தினால் அழுது அழுது அவருடைய நிலை குலைந்து பார்வையும் இழந்துவிட்டது. ஆனால், அவர் பொறுமை மற்றும் மன உறுதியினையும் நம்பிக்கையையும் பற்றிப்பிடித்துக்கொண்டிருந்தார்கள், அவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கை ஒருபோதும் இழக்கவில்லை. அவருடைய மற்ற மகன்களைப் பார்த்து சென்று அவரைத்தேடுங்கள் என்று அவ்வப்போது கூறிக்கொண்டே இருந்தார்கள். திருக்ஃகுர்ஆனில் இதனைப்பற்றி இவ்விதமாக வருணிக்கப்பட்டுள்ளது:

يَا بَنِيَّ اذْهَبُوا فَتَحَسَّسُوا مِن يُوسُفَ وَأَخِيهِ وَلَا تَيْأَسُوا مِن رَّوْحِ اللَّهِ ۖ إِنَّهُ لَا يَيْأَسُ مِن رَّوْحِ اللَّهِ إِلَّا الْقَوْمُ الْكَافِرُونَ ﴿٨٧﴾ **(سورة يوسف : 87)**

*பொருள்: என் பிள்ளைகளே, நீங்கள் சென்று யூசுஃப் மற்றும் அவருடைய சகோதரரைப் பற்றித் தீர விசாரியுங்கள், அல்லாஹ்வின் கருணையைக் கொண்டு நிராசை அடையாதீர்கள், நிராகரிக்கும் மக்கள்தான் அவனுடைய கருணையைக் கொண்டு நிராசை அடைகிறார்கள். (யூசுஃப்:87)*

இறுதியில் அல்லாஹ் தஆலா ஹஜ்ரத் யாஃகூப் (அ) அவர்களுடைய நம்பிக்கை மற்றும் எதிர்ப்பார்ப்பைப் பூர்த்தி செய்தான் அவருடைய இரு மகன்களும் கிடைக்கப்பெற்று அவருடைய பார்வையும் திரும்பி மகிழ்ச்சியடைந்தார்கள்.

இவ்வாறே, ஹஜ்ரத் மூசா (அ) அவர்களுடைய நம்பிக்கை மற்றும் எதிர்ப்பார்ப்பையும் அல்லாஹ் தஆலா பூர்த்தி செய்தான். பனு இஸ்ராயீல் சமூகத்தினர் அனைவரும் ஹஜ்ரத் மூசா (அ) அவர்களுடைய வழிகாட்டுதலில் எகிப்திலிருந்து இரவோடிரவாகப் புறப்பட்டுச்சென்றபோது, திடீரென நைல் நதி அவர்களுக்கு முன்பாகவும் ஃபிர்அவ்னுடைய படைகள் அவர்களைப் பின்தொடர்ந்தும் வந்தபோது அவர்கள் கடலில் மூழ்கடிக்கப்படுவார்கள் அல்லது ஃபிர்அவ்னும் அவனுடைய படைகளும் அவர்களைப் பிடித்துக்கொள்வார்கள் என்பது தெளிவாகிவிட்டது. நாங்கள் பிடிபட்டு சிக்கிக் கொண்டோம் என்று பனு இஸ்ராயீல் மக்கள் கூச்சலிட்டனர். இந்நிலையில் ஹஜ்ரத் மூசா (அ) அவர்கள் முழு நம்பிக்கையுடன் இந்த அறிவிப்பைச் செய்தார்கள், இதுதிருக்ஃகுர்ஆனில் வருணிக்கப்பட்டுள்ளது:

قَالَ كَلَّآ إِنَّ مَعِىَ رَبِّى سَيَهْدِينِ ﴿٦٢﴾ **(سورة الشعراء : 62)**

*பொருள்: ஒருபோதும் இல்லை, என்னோடு என் இறைவன் இருக்கிறான், நிச்சயம் அவன் எனக்கு வழி காட்டுவான் (அஷ் ஷுஅரா:62)*

அல்லாஹ் ஹஜ்ரத் மூசா (அ) அவர்களுக்குக் கட்டளையிட்டான், உம்முடைய தடியைத் தண்ணீர்மீது அடியும், அதன் காரணமாக தண்ணீர் பிளந்து விலகியது, ஹஜ்ரத் மூசா (அ) அவர்கள் தன்னுடைய சமூகத்தாருடன் பத்திரமாக நதியைக் கடந்து வந்துவிட்டார்கள், ஃபிர்அவ்ன் இதனைக் கண்டு தானும் தன்னுடைய படைகளுடன் அதே பாதையில் பாதியளவு தூரம் கடந்து வந்தபோது தண்ணீர் அல்லாஹ்வுடைய கட்டளையினால் மீண்டும் கலந்துவிட்டது, அவன் தன்னுடைய படைகளுடன் தண்ணீரில் மூழ்கிவிட்டான்.

இவ்வாறே, ஹஜ்ரத் அய்யூப் (அ) அவர்களையும் அல்லாஹ் சோதித்தான். அவர் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டார், செல்வம் முழுவதும் தீர்ந்துவிட்டது. குழந்தைகளும் பிரிந்துவிட்டனர், ஏதும் அவரிடம் மீதமாயிருந்து என்றால் அது அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை மட்டுமே. அவர் எப்போதும் அல்லாஹ்விடம் துஆ செய்துகொண்டிருப்பார்கள்:

www.uzaifalahi.com

وَأَيُّوبَ إِذْ نَادَىٰ رَبَّهُۥٓ أَنِّي مَسَّنِيَ ٱلضُّرُّ وَأَنتَ أَرْحَمُ ٱلرَّٰحِمِينَ ﴿٨٣﴾ (سورة الأنبياء:83)

*பொருள்: (அருட்பேறுகளை) நாம் அய்யூபுக்கும் (அ) வழங்கியிருந்தோம், அவர் தம்முடைய இரட்சகனிடம் இறைஞ்சியதை நினைவு கூறும், எனக்கு நோய் பிடித்துவிட்டது, நீயோ கிருபை செய்வோரில் எல்லாம் பெருங் கிருபையாளனாய் இருக்கின்றாய். (அல் அன்பியா:83)*

அல்லாஹ்விடம்அவர் இறைஞ்சி துஆ கேட்டது வீணாகப்போகவில்லை. அவருடைய நம்பிக்கையும் எதிர்ப்பார்ப்பும் நிறைவேறியது. அல்லாஹ் கடும் நோய்வாய்ப்பட்ட அவருக்கு நிவாரணமளித்து அவர் இழந்துவிட்ட அனைவற்றைவிடவும் சிறந்ததை அதற்கு பதிலாக அளித்தான்.

## நம்பிக்கையின் உண்மையான சிந்தனை

அல்லாஹ் தஆலாவை நம்பி இருப்பது மற்றும் அவனுடைய பாவ மன்னிப்பை நாடுவது, எதிர்ப்பார்ப்பது ஒரு மனிதன் கைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து அனைத்துப் பிரச்சினைகளும் தாமாகவே தீர்ந்து விடும் என்று நினைப்பது என்பது அல்ல. நம்பிக்கையின் இது தவறான கருத்தாகும். மனிதன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கவும் வேண் டும் மற்றும் தன்னால் இயன்ற அளவு முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். ஆசைகள் மட்டும் கொண்டு பகல் கனவு காண்பதினால் ஒன் றும் நிறைவேறாது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

فَمَن كَانَ يَرْجُوا۟ لِقَآءَ رَبِّهِۦ فَلْيَعْمَلْ عَمَلًا صَٰلِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِۦٓ أَحَدًۢا ﴿١١٠﴾ (الكهف : 110)

*பொருள்: எவர் தன் இறைவனின் சந்திப்பை எதிர்ப்பார்த்தவராய் இருக் கின்றாரோ அவர் நற்செயல்களைப் புரியட்டும். அடிபணிவதில் தன் இறை வனுக்கு யாரையும் இணையாக்காதிருக்கட்டும் (அல் கஹஃப்:110)*

*அல்லாஹ் தஆலா மேலும் கூறுகின்றான்:*

إِنَّ ٱلَّذِينَ ءَامَنُوا۟ وَٱلَّذِينَ هَاجَرُوا۟ وَجَٰهَدُوا۟ فِى سَبِيلِ ٱللَّهِ أُو۟لَٰٓئِكَ يَرْجُونَ رَحْمَتَ ٱللَّهِ ۚ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴿٢١٨﴾ (البقرة : 218)

*பொருள்: எவர்கள் நம்பிக்கை (ஈமான்) கொண்டார்களோ மற்றும் இறை வனுக்காக தம் வீடு வாசல்களைத்துறந்து இறைவன் வழியில் ஜிஹாத் செய்தார்களோ அவர்களே அல்லாஹ்வின் நல்லருளை நியாயமாக எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களின் பிழையைப் பெரிதும் மன்னிப்பவனாகவும் அவர்கள் மீது பேரருள் புரிபவனாகவும் இருக்கிறான்.*



www.uzairfahri.com

மனிதன் நம்பிக்கை மட்டும் அல்லாஹ்வின்மேல் வைத்து தான் கைகட்டி அல்லாஹ் அவனுக்கு நல்லதையே செய்வான் என்று நினைத்துக்கொண்டிருக்கும் அணுகுமுறை சரியானதல்ல. அதே சமயத்தில் அவன் அல்லாஹ் எதனைக் கடமையாக்கியிருந்தானோ அதை மறந்து, அவனுடைய கட்டளைகளையும் நிறைவேற்றாது எவற்றிலிருந்து அல்லாஹ் தடுத்திருந்தானோ அவற்றிலிருந்து விலகி இருக்கவுமில்லை என்றால் அது அவனுக்கே மோசம் செய்ததுபோலாகும். இம்மாதிரியான அணுகுமுறை பலனளிப்பதற்குப்பதிலாக வேடிக்கைக்குரியதாக ஆகிவிடும். இம்மாதிரியாக நடந்துகொள்வதிலிருந்து விலகி இருக்கவேண்டும் என்பதற்காக இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: **حُسْنُ الظَّنِّ مِنْ حُسْنِ الْعِبَادَةِ** பொருள்: *அதாவது, நல்லதை நினைப்பது நல்ல முறையில் இறைவனை வணங்குவதன் மூலமே நிலைநாட்டமுடியும் (அபூ தாவூத், அஹ்மது)*

நம்பிக்கையின் அடிப்படையில்தான் உலகமே வாழ்ந்துகொண்டிருக்கின்றது என்று கூறுவார்கள். அந்த நம்பிக்கையின் இணைப்பு விட்டுவிடமேயானால் மனிதன் அணைந்துவிட்டவனாக ஓய்ந்துவிடுவான். வாழ்க்கையின் போராட்டங்களுக்கிடையில் இந்த நம்பிக்கைதான் அவனை அதன் ஓடத்தில் தொடரச்செய்து என்றும் இளமைத்துடிப்புடன் வைத்துக்கொண்டிருக்கின்றது, அவ்வாறில்லாதுபோனால் அவன் களைத்து உட்கார்ந்துவிடுவான் மேலும் நம்பிக்கையிழந்து பிரச்சினைகளால் சுற்றி வளைக்கப்பட்டுவிடுவான். நம்பிக்கையின்மையின் இறுதிக்கட்டம் கல்லறைதான் மாறாக நம்பிக்கையின் மற்றொருபெயர் வாழ்கையாகும். நம்பிக்கையின்மையுடனான வாழ்க்கை நினைத்துப் பார்க்கவும் முடியாது ஆனால், நம்பிக்கை வாழ்க்கையை வளமுடன் செழிப்பானதாகிவிடுகிறது. இதன் காரணமாகத்தான் அல்லாஹ் நம்பிக்கையின்மையை 'குஃப்ரு' நிராகரிப்பு எனக்கூறுகிறான். பாவமன்னிப்பில் நம்பிக்கை மனிதனை மனந்திருந்தி மன்னிப்புக்கோரும் நிலைக்குக் கொண்டுசெல்கின்றது, அல்லாஹ்வுடனான தொடர்புகள் அறுபட்டபின்பும் அவனை அல்லாஹ்வுடன் இணைத்துவிடுகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

قُلْ يَـٰعِبَادِىَ ٱلَّذِينَ أَسْرَفُوا۟ عَلَىٰٓ أَنفُسِهِمْ لَا تَقْنَطُوا۟ مِن رَّحْمَةِ ٱللَّهِ ۚ إِنَّ ٱللَّهَ يَغْفِرُ ٱلذُّنُوبَ جَمِيعًا ۚ إِنَّهُۥ هُوَ ٱلْغَفُورُ ٱلرَّحِيمُ ﴿٥٣﴾ **(الزمر : 53)**

*பொருள்: கூறுவீராக, தன் ஆத்மாக்களுக்குக் கொடுமை இழைத்துக் கொண்ட என் அடிமைகளே, அல்லாஹ்வின் கருணை பற்றி நம்பிக்கை இழந்துவிடாதீர்கள், நிச்சயம் அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுகின்றான். (அஜ்ஸ்ஸுமர்:53)*

www.uzairfalahi.com

பாவங்களில் மூழ்கிக்கிடக்கும் மனிதனின் கடைசி ஆதாரம் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையாகவே இருக்கும், அவன் என் பாவங்களை மன்னித்து விடுவான் மற்றும் அருள் புரிவான். இந்த நம்பிக்கை அல்லாஹ் தஆலா வின் அருட்கொடையாகும் அது பறிக்கப்பட்டால் மனிதனுடைய வாழ்க்கை இருண்டுவிடும், அது கிடைத்துவிடுமானால் மனிதன் பாழடைந்த இடி பாடுகளிலும் மலர்ந்தெழுவான். இறைத்தூதர் ﷺ கூறுகிறார்கள்:

**إِنْ قَامَتِ السَّاعَةُ وَفِيْ يَدِ أَحَدِكُمْ فَسِيْلٌ، فَإِنِ اسْتَطَاعَ أَلاَّ تَقُوْمَ السَّاعَةُ حَتَّى يَغْرِسَهَا، فَلْيَفْعَلْ**

பொருள்: *இறுதிநாள் வந்துவிட்ட சமயத்திலும் ஒருவருடைய கையில் ஒரு செடியின் (நாற்று) இருக்குமானால், (அத்தருணத்திலும்) அதன் அழிவு வராதவரை அவரால் அதனை நட்டுவிடமுடியுமானால், அதனைச் செய்து விடவேண்டும்.* (அபூதாவூத், அத்தயாலிசி).

சற்றே சிந்தித்துப்பாருங்கள், இந்தக் கலாச்சார நாகரீக வளர்ச்சியின் கோலா கலம், கண்டுபிடிப்புகளின் தீவிர முனைப்பு, வாழ்க்கையின் துடிப்பு மற்றும் எண்ணங்களில் பேரார்வம் இவையெல்லாம் எவற்றின் மீது சார்ந்திருக்கின்றன? மனிதர்களுடைய வாழ்க்கையிலிருந்து நம்பிக்கை மற்றும் ஆர்வம் ஆகியவை நீக்கப்படுமானால் இந்தச் செயல்பாடுக ளெல்லாம் இல்லாதுபோய்விடுவதோடு முழுமையாகவே தணிந்துவிடும்.

طبیب عشق نے دیکھا مجھے تو فرمایا
ترا مرض ہے فقط آرزو کی بے نیشی

* * *

www.uzairfalahi.com